In the Court of the Principal District Judge, Vellore District.
Deposition of Witness for P.W.2
O.S.No.108 of 2025

| | |
|---|---|
| Name | தாரா |
| Father/Husband Name | மோகன் |
| Calling/Occupation | |
| Age | 61 |
| Address | நெம்பர் 13, சரஸ்வதி அம்மாள் தெரு, டி.கே.எம. கல்லூரி ரோடு, சாயிநாதபுரம், வேலூர் மாவட்டம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2026.

**முதல் விசாரணை**

நான் வாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை என உறுதி அளிக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என் வழக்கறிஞர் தயார்செய்து கொடுத்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு எதுவும் தெரியாது. ஆர்த்தி என் மகள், 1வது பிரதிவாதி என் மகன், 2வது பிரதிவாதி என் கணவர். அவர்கள் அல்லாமல் எனக்கு இன்னொரு மகள் மாலதி உள்ளார். வாதி

ஆர்த்தி என்பவரின் கணவர் சேலத்தை சேர்ந்தவர். வாதியும் அவரின் கணவரும் திருமணத்திற்கு பிறகு எத்தனை வருடங்கள் சேலத்தில் வசித்து வந்தார்கள் என்றால் அங்கு வசிக்கவில்லை, திருமணத்திற்கு பிறகு இங்கு தான் வசித்து வருகிறார்கள். எனக்கு திருமணம் ஆனபோது அலமேலு அம்மாள் உயிருடன் இருந்தார். வழக்கு சொத்து அலமேலு அம்மாள் சொத்து என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் உயிலை இதற்கு முன் நான் பார்த்துள்ளேனா என்றால் கையெழுத்து போடும் போது பார்த்தேன். உயில் சாசனத்தில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது. 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். எனக்கு தாரா என்பதை தவிர்த்து வேறு பெயர் உள்ளதா என்றால் இல்லை. உயிலில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது அதை யாரும் எனக்கு படித்து காண்பிக்கவில்லை. வீட்டில் வைத்து கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். யார் தயார் செய்து எடுத்து வந்தார்கள் என்று தெரியாது.

என் பிரமாண வாக்குமூலத்தில் அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் படித்து காண்பிக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது. என் மகள் ஆர்த்தி அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்தேனா என்றால் ஆம். சாட்சி கையெழுத்து போட்டதால் சாட்சியம் அளிக்க வந்தேன். ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாமல் கையெழுத்து போட்டுள்ளதால் என் சாட்சியம் ஏற்தக்கதல்ல என்றால் சரியல்ல. அலமேலு அம்மாளுக்கு என் கணவர் தான் ஒரே வாரிசு என்றால் ஆமாம்.

நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். அதனால் அந்த வீட்டிற்குள் நடக்கும் அத்தனை விஷயங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் கணவர் என் மகனுக்கு சொத்து எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் மகன் பொய்யாக உயில் சாசனம் தயார் செய்து அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.08.13 17:14:46 +0530